# நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவை வழங்கும் 'அம்மா திட்டம்' – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு பொதுமக்கள் நெஞ்சார்ந்த நன்றி...

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற நாள் முதல் தமிழகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இல்லாமை இல்லாத நிலை உருவாகிட வேண்டும் என்ற உயரிய நோக்கில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம், மாணவ–மணவிகளுக்கு தங்கள் அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் மடிக்கணினி வழங்கும் திட்டம், மாணவ–மாணவிகளின் வளமான எதிர்காலத்துக்கு வித்திடும் வகையில் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம், கிராமப்புற ஏழை, எளிய மக்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் அடைய ஆடுகள் வழங்கும் திட்டம், வெண்மைப்புரட்சியை உருவாக்கும் வகையில் பால் உற்பத்தியைப் பெருக்கவும், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் என பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொது மக்களின் தேவை அறிந்து, தாய் குழந்தைக்கு உணவளிப்பது போல தமிழக மக்களுக்கு உதவி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் 65–வது பிறந்த நாளை முன்னிட்டு வருவாய்த்துறை மூலம் அனைத்து கிராமங்களிலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்குவதற்காக தோற்றுவிக்கப்பட்ட திட்டம் தான் '**<u>அம்மா திட்டம்</u>**' (**A**ssured **M**aximum Service To **M**arginal People in **A**ll Villages). மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் இத்திட்டம் கடந்த 24.02.2013 அன்று ஈரோடு மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டு, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தற்போது மக்கள் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பலமுறை வந்து மனுக்கொடுத்து வருகின்றனர். வட்டாட்சியர்களுக்கு பல வெளிவேலை காரணமாக அவரை சந்தித்து முறையீடு செய்ய இயலாத நிலையில் தாமதம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. மேலும், வயதானவர்கள், ஏழைகள், பணம், நேரம், செலவழித்து தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து செல்வதும் சிரமமாக உள்ளது.

**'அம்மா'** திட்டத்தின்படி வாரத்தில் ஒரு நாள் ஒரு ஊராட்சியில் வருவாய்த்துறை சார்பில் முகாமிட்டு வருவாய்த் துறையின் முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனை பட்டாக்கள், வீட்டு மனை பட்டாக்கள், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றை ஊராட்சியில் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக வழங்கப்படுகிறது. இதுதவிர, குடும்ப அட்டை, குடிநீர் பிரச்சனைகள், நிலம் சம்மந்தமான பிரச்சனைகளும் நேரில் ஆய்வு செய்து தீர்வு காணப்படுகிறது. இதன் மூலம் வருவாய்த்துறை மக்களுக்கு ஆற்றி வரும் சேவை துரிதப்படுத்தப்பட்டு மக்கள் பயன் அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**'அம்மா'** திட்டத்தின் மூலம் வருவாய்த்துறை அலுவலர்கள், வட்டாட்சியர் தலைமையிலான குழு, ஒவ்வொரு கிராமத்திற்கும் பிரதிவாரம் செவ்வாய்க்கிழமை சென்று அக்கிராம மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்று, அவ்விண்ணப்பங்களை ஆய்வு செய்து உடனடியாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகிறது. இச்சீரிய திட்டத்தின் மூலம் ஆறு மாத காலத்திற்குள் தமிழகத்தில் உள்ள 16,671 வருவாய் கிராமங்களுக்கும் சென்று முதல் சுற்றிலேயே குறைகள் முழுவதையும் தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அம்மா திட்டத்தின் கீழ் 2013 செப்டம்பர் 20–ந் தேதி வரை 32,69,952 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 26,78,140 மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உள்ளாட்சி அமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுடன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் **'அம்மா'** திட்டத்தில் கலந்து கொள்ள ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமைகளில் நடைபெற்று வரும் அம்மா திட்ட முகாமை வெள்ளிக்கிழமைகளில் வைத்துக் கொண்டால் நன்மை பயக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். இதன் அடிப்படையில் அம்மா திட்ட முகாமை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்படி தற்போது அனைத்து மாவட்டங்களிலும் பிரதிவாரம் செவ்வாய்கிழமை அன்று நடத்தப்பட்டு வந்த **'அம்மா திட்டம்'** முகாம் பிரதிவாரம் வெள்ளிக்கிழமை அன்று நடத்தப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் அம்மா திட்டத்தின் கீழ் 24.09.2013 வரை குன்னூர் கோட்டத்திற்கு உட்பட்ட உதகமண்டலம் வட்டத்தில் 19 கிராமங்களில் 32 முகாம்கள் நடத்தப்பட்டு 7744 மனுக்களும், குன்னூர் வட்டத்தில் 15 கிராமங்களில் 26 முகாம்கள் நடத்தப்பட்டு 8635 மனுக்களும், கோத்தகிரி வட்டத்தில் 20 கிராமங்களில் 49 முகாம்கள் நடத்தப்பட்டு 5575 மனுக்களும், குந்தா வட்டத்தில் 10 கிராமங்களில் 26 முகாம்கள் நடத்தப்பட்டு 3642 மனுக்களும், கூடலூர் கோட்டத்திற்கு உட்பட்ட கூடலூர் வட்டத்தில் 13 கிராமங்களில் 26 முகாம்கள் நடத்தப்பட்டு 9297 மனுக்களும், பந்தலூர் வட்டத்தில் 8 கிராமங்களில் 26 முகாம்கள் நடத்தப்பட்டு 9085 மனுக்களும், என மொத்தம் 85 கிராமங்களில் 185 முகாம்கள் நடத்தப்பட்டு, 43,978 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 43,528 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிற துறைகளுக்கு 115 மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது, 335 மனுக்கள் நிலுவையில் உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் அம்மா திட்டத்தின் கீழ் 99% மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ‘அம்மா திட்டம்’ தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை மிகச் சிறப்பாக செயல்படுத்தபட்டு வருகிறது. வயதானவர்கள், ஏழைகள், பணம், நேரம், செலவழித்து தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து மாதாந்திர ஓய்வூதியம், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனை பட்டாக்கள், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் போன்றவைகளை பெறுவதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிறப்பான திட்டமான ‘அம்மா திட்டம்’ மூலாமாக மேற்கண்ட அனைத்தும் தற்போது உடனடியாக கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. இதனால் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பெரிதும் பயன் அடைந்து வருகின்றனர். இத்திட்டத்தை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு ஆனந்த கண்ணீருடன் நன்றி தெரிவித்தனர்.

ஏழை விதவை பொ.நாகீ அடைந்த மகிழ்ச்சியை நம்மிடையே பகிர்ந்து கொண்டார். நீலகிரி வட்டம், குன்னூர் வட்டம், பர்லியார் ஊராட்சி, கோழிக்கொரை கிராமத்தைச் சேர்ந்த தினக் கூலித் தொழிலாளி பொ.நாகீ (55). இவரது கணவர் பொன்னன் தற்போது உயிருடன் இல்லை.

இவர் கடந்த ஓராண்டு காலமாக வருமானச் சான்று மற்றும் இருப்பிடச் சான்று கேட்டு தாலுகா அலுவலகத்தில் மூன்று முறை மனு செய்துள்ளார். ஆனால் இன்று வரை அவருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. இதனால் அவர் மிகவும் சிரமப்பட்டு வந்துள்ளார். மேற்கண்ட சான்றிதழ்கள் இருந்தால் தான் அரசாங்கத்தால் வழங்கப்படும் விதவை உதவித்தொகை போன்ற பல்வேறு சலுகைகள் தனக்கு கிடைக்கும் என்று கவலையுடன் இருந்தார். இந்த நிலையில் தான் மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளம் கொண்டு ஏழைகளின் தேவைகளை அறிந்து 'அம்மா திட்டத்தை' தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார்கள். கடந்த 25.10.2013 அன்று பர்லியார் ஊராட்சியில் நடைபெற்ற அம்மா திட்ட முகாமில் வருமானச் சான்று மற்றும் இருப்பிடச் சான்று கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக மனு அளித்தேன். மாவட்ட ஆட்சியர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்று, உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்களை வழங்கினார்கள். மேற்கண்ட சான்றிதழ்களை கிடைக்க வழிவகை செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வாழ்நாள் உள்ளவரை மறக்க மாட்டோம் என்றார்.

**சா.இளங்கோ,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.**